**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.134/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | அய்யப்பன் | Prosecution | LW-1 as PW1. |
| Father Name | கணேசன் | Defence | |
| Village | சீர்காழி | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 51/2025 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**24.11.2025.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரில் வசித்து பாத்திரக்கடை வைத்து வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. யார் மீதும் நான் காவல்நிலையம் சென்று புகார் கொடுக்கவில்லை. இந்நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை. போலிசார் என்னை விசாரிக்க வில்லை .

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியுமா என்றால் அவர்கள் யார் என்றே எனக்கு தெரியாது. கடந்த 11.01.2022 ம் தேதி பகல் 11.00 மணிக்கு நான் சீர்காழியில் உள்ள அத்திக்குட்டை மதகு அருகே எனது இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்த போது ஆஜர் எதிரிகள் என்னை வழிமறித்து தகாத வார்த்தைகளால் திட்டினார்கள் என்றால் சரியல்ல. அதில் எதிரி பார்த்திபன் முதுகில் மறைத்து வைத்திருந்த வீச்சருவாளை காட்டி என் சட்டை பையில் வைத்திருந்த ரூ.200/- யை எடுத்துக்கொண்டார் என்றால் சரியல்ல. மேற்படி விபரங்களை போலிசாரிடம் புகார் மனுவாக கொடுத்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.134/2023**

| Deposition of Name | மூர்த்தி | Prosecution | LW-2 as PW2. |
|---|---|---|---|
| Father Name | சம்பந்தம் | Defence | |
| Village | செம்மங்குடி | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 71/2025 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**24.11.2025.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரில் வசித்து டீக்கடையில் வேலை செய்து வருகிறேன். இந்நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள சாட்சி கையொப்பங்களில் என்னுடையது இல்லை. போலிசார் என்னை விசாரிக்க வில்லை .

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நடேசன் மகன் சுந்தரமூர்த்தி என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கடந்த 11.01.2022 ம் தேதி பகல் 16.00 மணிக்கு நானும் சுந்தரமூர்த்தி என்பவரும் சீர்காழி பைப்பாசில் உள்ள இன்பவள்ளி ஹோட்டல் அருகே நின்றுகொண்டிருந்த போது சீர்காழி போலிசார் எங்கள் முன்னிலையில் ஆஜர் எதிரிகளை பிடித்து விசாரித்தார்கள் என்றால் சரியல்ல. அப்போது எதிரிகள் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புலல் வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் பதிவுசெய்தார்கள் என்றாலும் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி வைத்திருந்த வழக்கு பொருளை எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரின் மூலம் கைப்பற்றினார்கள்

என்றாலும் சரியல்ல. மேற்படி விபரங்களை போலிசாரிடம் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**